DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -2

| | | |
|---|---|---|
| Name | : திரு.பழனிவேலு | Caste: |
| Father's Name: | திரு. ராமசாமிகவுண்டர் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 5th day of June - 2023.
A1 and A3 to A6 present.

**05.06.2023.**

**முதல் விசாரணை**

நான் தர்மபுரி மாவட்டம், அரூர் தாலுக்கா, பெரிய பன்னீமடுவு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். விவசாயம் செய்து வருகிறேன். இறந்து போன விஜயன் எனது மைத்துனர். அவரது உடன் பிறந்து மூத்த சகோதரியான ஜெயலட்சுமி என்பவரை தான் நான் திருமணம் செய்திருக்கிறேன். அ.சா.1 எனது மனைவியின் உடன் பிறந்த இளைய சகோதரி.

விஜயனுக்கு நடேசன் என்று ஒரு சகோதரர் உண்டு. நடேசன் சுமார் 30 ஆண்டுகளாக கள்ளக்குறிச்சியில் வசித்து வந்தார். அவர் காலமாகிவிட்டார். ஆஜர் எதிரிகள் யாரையும் எனக்கு தெரியாது. எனது மனைவி ஜெயலட்சுமி நீதிமன்றத்திற்கு இன்று வரவில்லை. அவருக்கு புற்றுநோய் ஏற்பட்டு வாயில் அறுவைசிகிச்சை

மேற்கொள்ளப்பட்டு கீழ்தாடை அகற்றப்பட்டு அவரால் பேசமுடியாது. அவருக்கு டியூப் வழியாகத்தான் உணவு அளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01ஆம் தேதி இரவு நேரத்தில் விஜயன் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அதற்கு மறுநாள் காலையில் விஷயம் வெளியே தெரிந்தது. 02.09.2014 ஆம் தேதி அன்று விஜயனின் பங்காளி பழனிச்சாமி(எ) சின்னக்குஞ்சு என்பவர் போன்மூலம் தொடர்பு கொண்டு விஜயன் கொலை செய்யப்பட்டது சம்மந்தமாக சொன்னார். விஜயன் கழுத்து அறுக்கப்பட்டும், வயிற்றில் குத்தப்பட்டும் இறந்துகிடப்பதாகவும் விரைந்து வரும்படியும் சொன்னார்.

நான் சம்பவ இடத்திற்கு சுமார் 2 மணி நேரத்தில் வந்துவிட்டேன். விஜனுக்கும் அவரது பங்காளி மற்றும் பக்கத்து நிலத்துக்காரன சுந்தரமூர்த்தி என்பவருக்கும் நிலத்தகராறு இருந்ததாகவும், அதன் காரணமாகத்தான் விஜயன் கொலை செய்யப்பட்டிருப்பார் என்றும் சம்பவ இடத்திலிருந்த பொதுமக்கள் பேசிக்கொண்டார்கள்.

சுந்தரமூர்த்தியின் சகோதரி சாந்தா என்பவரை எனது ஊருக்கு பக்கத்தில் உள்ள அனுமந்ததீர்த்தம் என்ற ஊரில் ஒரு நபருக்கு சுமார் 40 வருடங்களுக்கு முன்பாக திருமணம் செய்து கொடுத்தார்கள். திருமணம் முடிந்து 40 தினங்களில் சாந்தாவின் கணவர் இறந்துவிட்டார். எனவே சாந்தாவிற்கு இழப்பீடாக அவரது கணவர் குடும்பத்திலிருந்து 4/5 ஏக்கர் நிலம் கொடுத்தார்கள். அந்த நிலத்தை சுந்தரமூர்த்தி வாங்கிகொண்டு கிரையத்தொகையை சரியாக கொடுக்காமல் இருந்திருக்கிறார். அதனால் சாந்தாவிற்கும் சுந்தரமூர்த்திக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கிறது.

எனவே, சுந்தமூர்த்தி குடும்பத்திற்கு சொந்தமான சொத்தில் தனக்கும் பங்கு இருப்பதாக சொல்லி சாந்தா அவருடைய பாகத்தை விஜயனை சமாதானம் செய்து அவருக்கு கிரையம் கொடுத்திருக்கிறார். அந்த கிரையத்தின் காரணமாக விஜயனுக்கும், சுந்தர மூர்த்திக்கும் பிரச்சனை ஏற்பட்டு விரோதம் இருந்து வந்திருக்கிறது. அது சம்மந்தமாக விஜயன் சுந்தரமூர்த்தி மீது நீதிமன்றத்தில் வழக்கு

தாக்கல் செய்திருக்கிறார். அந்த விரேதமானது பின்னிட்டு பெரிதாகி கொலையில் முடிந்திருக்கிறது. சாட்சி 1 ஆம் எதிரியை சரியாக தொட்டு அடையாளம் காட்டி அவர் தனது மாப்பிள்ளை தான் என்று சொல்லுகிறார்.( சாட்சி வயது முதிர்ந்தவர் என்பதால் நீதிமன்ற அனுமதியுடன் சாட்சி கூண்டிலிருந்து வெளியேறி எதிரிகள் நிற்கும் இடம் சென்று பார்வையிட்டு 1 ஆம் எதிரியை அடையாளம் காட்டுகிறார்.)

போலிசார் என்னை விசாரித்தார்கள். மேற்படி சங்கதிகளை நான் போலிசாரிடம் சொன்னேன். சம்பவ இடத்தில் வைத்து போலிசார் பிரேத விசாரணை மேற்கொண்டார்கள். அப்போது நான் உடன் இருந்தேன். போலிசார் என்னையும் விசாரித்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு வருவதற்கு முன்பாகவே பிரேதத்தை போலிசார் அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தி மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள்.

<u>**1 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் அரூர் பெரியபன்னீமடுவு என்ற இடத்தில் தான் நான் குடியிருக்கிறேன். நான் குடியிருக்கும் இடத்திற்கும் சம்பவ இடத்திற்கும் இடையே சுமார் 85 கி.மீ தொலைவு இருக்கும். நான் சம்பவ இடத்திற்கு வரும்போது என்னுடன் என் மனைவியும் வந்தார். ஒட்டமரக்காட்டில் வைத்து போலிசார் என்னை விசாரணை செய்தபோது அந்த இடத்தில் பிரேதம் இல்லை. மருத்துவமனைக்கு கொண்டு சென்று விட்டார்கள்.

தனக்கு சொந்தமான பங்கை மட்டும் சாந்தா விஜயனுக்கு கிரையம் எழுதிக்கொடுத்தார். அது எவ்வளவு பங்கு என்று எனக்கு நினைவில்லை. சாந்தாவிற்கு 2 சகோதரிகள் உண்டு. சாந்தா தனது கணவர் வழியில் தனக்கு கிடைத்த சொத்தை சுந்தரமூர்த்திக்கு கிரையம் கொடுத்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. அப்படித்தான் ஊரில் பேசிக்கொண்டார்கள். நான் பத்திரத்தை நேரில் பார்க்கவில்லை.

விஜயன் சுந்தரமூர்த்தி மீது தாக்கல் செய்ததாக சொல்லும் வழக்கு சம்மந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. கேள்விப்பட்டது தான். காவல்துறையினர் என்னை 2 முறை விசாரித்தார்கள். முதல் முறை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். அதன்பின்னிட்டு 4, 5 நாட்களுக்கு பிறகு என்னை காவல்நிலையத்திற்கு வரச்சொல்லி விசாரித்தார்கள்.

விஜயன் என்பருக்கு திருமணம் நடைபெறமல் இருந்ததால் அவருக்கு இருந்த கள்ளத்தொடர்பின் காரணமாக அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. போலிசார் என்னை விசாரித்த போது என் தம்பி விஜயன் பெயருக்கு சாந்தா எழுதி வைத்துவிட்டார் என்று நான் வாக்குமூலம் கொடுக்கவில்லை. மேலும் சேலம் நிலஅபகரிப்பு பிரிவு என் தம்பி விஜயன் மேல் வழக்க போட்டு என் தம்பி விஜயனை போலிசார் கைது செய்தார்கள் என்று நான் சொல்லவில்லை.

நிலம் கிரையம் கொடுத்தது சம்மந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும், போலிசார் சொல்லிக்கொடுத்து பொய்சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

**3 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது**.

**மறுவிசாரணை**

என் மனைவியின் தம்பி விஜயன் மீது நிலஅபகரிப்பு பிரிவு வழக்கு பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டார் என்று போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

**மறுகுறுக்கு விசாரணை இல்லை.**

விஜயன் கொலை சம்மந்தமாக சுந்தரமூர்த்தி செல்போனில் பேசியதாகவும், அப்போது சுந்தரமூர்த்தி விஜயனை எதற்காக, எப்படி கொலை செய்தோம் என்று பேசிஇருப்பதாகவும், அது சம்மந்தப்பட்ட பதிவினை தான் சி.டி உருவில் வைத்திருப்பதாகவும், நீதிமன்றம் அனுமதிக்கும் பட்சத்தில் அதனை தாக்கல் செய்வதாகவும் சுயமாக நீதிமன்றத்திற்கு சொல்கிறார். இது சம்மந்தமாக உரிய

நடவடிக்கை மேற்கொள்ளும்படி அரசு தரப்பு வழக்கறிஞரும், தற்போதைய ஆட்டையாம்பட்டி காவல்நிலைய ஆய்வாளரும் கோரப்படுகிறார்கள். ( தற்போதைய ஆட்டையாம்பட்டி காவல் ஆய்வாளர் நீதிமன்றத்தில் ஆஜர் )

1 ஆம் எதிரி தரப்பில் கு.விசாரணை

சுந்தரமூர்த்தி விஜயன் கொலை சம்மந்தமாக செல்போனில் பேசியதாகவும், அதனை பதிவு செய்து நான் சி.டி வடிவில் வைத்திருப்பதாகவும், வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

Sd/- **G. Sri Rama Jeyam,**
III Additional District Judge,
Salem.